16th April 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்காகத்தான் நான் முன்பு பதில் சொல்லும்போது ஜாக்கிரதையாக பதில் சொனனேன். இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாகச் சொல்லலாம்.

SRI K. ANBAZHAGAN : மருத்துவக் கல்லூரியில் மிக உயர்ந்த தகுதியைப் பெற்றிருந்தும் சிலர் மேல் பதவிக்கு உயர்த்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் மன வேதனை யால் பல மாணவர்கள் தோல்வியுறுவதற்குக் காரணமாகிறது என்று கூறப்படுகிறதே அது உண்மையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதாவது ஒரு முடிவில் அசம்பாவிதம் ஏற்பட்டால் பல பேர் பல விதமாக ஏதோ சாக்குப் போக்கு இந்த மாதிரி சொல்லலாம்.

SRI A. A. RASHEED : Is it a fact that failures among men students are more than among women students ?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is now being noted that girl students are more studious and more devoted to their studies.

MR. SPEAKER : I think the Hon. Minister for Industries and Labour will answer questions to be answered by the Hon. Minister for Works.

Road Development

* 687 *Q.*—SRI N. S. RAMALINGAM (on behalf of Sri T. Sampath): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் கொடுத்த ரஸ்தா மான்யத் தொகை எவ்வளவு ?

(ஆ) மேற்படித் தொகையிலிருந்து தஞ்சை ஜில்லாவிற்கு ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு ?

(இ) ஒதுக்கப்பட்ட தொகை மூலம் என்னென்ன வேலைகள் நடத்தப் பட்டு இருக்கின்றன. அல்லது எடுத்துக்கொள்ளப்பட்டன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 258.01 lakhs has been allotted to end of March 1960 to this State by the Central Government during the Second Plan period for works on State roads of economic or inter-State importance and for those taken up under the Central Road Fund Scheme.

(*b*) Rs. 26.67 lakhs.

(*c*) The information [a] is placed on the table of the House.

Mineral resources

* 688 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் கனிவளம் அறிய "Geological branch" ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

---

a Printed as Appendix II on pages 157–159 infra